# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 73 / 2022**

திரு N. நடராஜன்,
த/பெ. நாச்சிமுத்துக் கவுண்டர்,
7/84, கம்பாலபட்டி (அஞ்சல்),
ஆணைமலை வட்டம்,
கோவை – 642 007 . ………மேல்முறையீட்டாளர்
(திரு N. நடராஜன்)

எதிர்

செயற்பொறியாளர்/ இ&ப/ அங்கலக்குறிச்சி,
உடுமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/22 KV SS வளாகம், வாள்மாறை மெயின் ரோடு,
அங்கலக்குறிச்சி – 642 007.

...... எதிர்மனுதாரர்
(திரு. R. தேவானந்த், செயற்பொறியாளர்/ இ&ப/ அங்கலக்குறிச்சி)

**மனு பெறப்பட்ட நாள்: 01-09-2022**

**கேட்புரை நாள்: 08-12-2022**

**ஆணை நாள்: 04-01-2023**

01.09.2022 அன்று பெறப்பட்ட திரு N. நடராஜன், த/பெ. நாச்சிமுத்துக் கவுண்டர், 7/84, கம்பாலபட்டி (அஞ்சல்), ஆணைமலை வட்டம், கோவை – 642 007 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 73/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.12.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

சர்வே எண் 139/1–இல் இருந்த விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்யப்பட்டதை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **<u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 கூட்டுப்பங்குதாரர்களுக்கு சொந்தமான சர்வே எண் 139/1–இல் இருந்த விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்யப்பட்டதை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்படி சர்வே எண் திரு.சண்முகவேல் பெயரில் இருந்ததாலும் சர்வே எண் 140/1–இல் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் பூமி திரு.சண்முகவேல் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக இருந்ததாலும் வாரிய விதிகளின்படி மின் இணைப்பு இடமாற்றம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, மேற்கூறிய சர்வே எண்ணில் உள்ள விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்துள்ளதை ரத்து செய்ய கோரி மேல்முறையீட்டாளர் உடுமலை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 08.12.2021 அன்று அணுகியுள்ளார்.

2.4 மேற்பார்வை பொறியாளர், உடுமலை மின்பகிர்மான வட்டம், 16.08.2022 நாளிட்ட கடித எண். க.எண்.மேபொ/ உடு/உ.செபொ/மே /உ,பொ/வ.ஆ/ கோ.மனு/ அ.எண்.611/22, நாள் 16.08.2022 கீழே கொடுக்கப்பட்டுள்ளது

> *"திருமதி.அம்சவேணி, க.பெ.நா.நடராஜ், அவர்களிடமிருந்து 08.12.2021 நாளிட்டு பெறப்பட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு (CGRF மனு எண் 30/2021) தொடர்பாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், உடுமலைப் பேட்டையில் விவாதிக்கப்பட்டு 25.02.2022 அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டுவிட்டதாலும், தற்போது தங்களிடமிருந்து பெறப்பட்ட மனுவும், அதே பொருள் மற்றும் கோரிக்கை கொண்டதாக இருப்பதால், மேற்படி மனு நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் ஏற்க இயலாததால் பதிவுறு செய்யப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."*

2.5 இந்நிலையில் திரு அம்சவேணி அவர்களுக்கு உடுமலை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 25.02.2022

நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்ற தீர்ப்புரை*
*மின் இணைப்பு எண்.03-333-004-146 / மின்பளு 7.5 HP ஜல்லிபட்டி கிராமம் சர்வே எண் 140/1 இல் உள்ளதை மீண்டும் ஜல்லிபட்டி கிராமம் சர்வே எண்.139/1 க்கு இடமாற்றம் செய்யவும்,*

*இடமாற்றம் செய்த பின் மின் இணைப்பு எண் 03-333-004-146 ஐ திரு.நா.சண்முகவேல் பெயரை நீக்கம் செய்து மற்ற கூட்டு பங்குதாரர்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வது குறித்தும்,*

*மேலே கண்டுள்ளவாறு தீர ஆராய்ந்து பரிசீலனை செய்ததில் மனுதாரரின் கோரிக்கையை ஏற்க இயலாது என தீர்மானித்து தீர்ப்புரை வழங்கப்படுகிறது."*

2.6 தற்சமயம் தன்னுடைய முறையீட்டு மனுவை உடுமலை மின் பகிர்மான வட்டம் மேற்பார்வை பொறியாளர் அவர்களால் நிராகரிக்கப்பட்டதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

3.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.12.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

3.2 மேல்முறையீட்டாளர் திரு N. நடராஜன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

3.3 எதிர்மனுதாரர் திரு. R. தேவானந்த், செயற்பொறியாளர்/ இ&ப/ அங்கலக்குறிச்சி. உடுமலை மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

4.1 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட முகவரியில் நிரந்தரமாக வசித்து வருவதாகவும், கடந்த 03.08.2022-ம் தேதியன்று, கூட்டுப்பங்குதாரர்களுக்கு சொந்தமான, சர்வே எண்ணில் இருந்த விவசாய மின் இணைப்பை சட்ட விரோதமாக இடமாற்றம் செய்யப்பட்டதை ரத்து செய்து, மீண்டும் பழைய நிலையில் வைக்க கோரி ஓர் புகார்

மனுவினை, மின்குறைதீர்க்கும் மன்றம், உடுமலைக்கு தாக்கல் செய்து 04.08.2022 அன்று சார்பு செய்யப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.2 மனுவிற்கு மின் குறைதீர்க்கும் மன்றம், மேல்முறையீட்டாளர் மூத்த குடிமகன் ஆகிய தனக்கு எந்தவொரு அழைப்பாணையும் அனுப்பவில்லை எனவும், தனது தரப்பு வாதங்கள் என்ன என்பதும் கேட்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.3 கடந்த 16.08.2022 ஆம் தேதியிட்டு, மின் குறைதீர்க்கும் மன்றம், உடுமலை அவர்கள், தனக்கு ஓர் பதில் வழங்கி, அதனை அவர், கடந்த 22.08.2022 ஆம் தேதியன்று, பெற்றுக் கொண்டதாகவும், மனுவில் சொல்லப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, ஏற்கனவே, தன்னுடைய மனைவி, அம்சவேணி அவர்கள், கடந்த 08.12.2021–ம் தேதியிட்டு, தாக்கல் செய்த மனுவின் மீது, CGRF மனு எண். 30/2021 என்ற எண்ணில் ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளதாக சொல்லி, தான் தாக்கல் செய்த மனுவினை, எவ்வித விசாரணையும் இன்றி தள்ளுபடி செய்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.4 உத்தரவில், மேற்படி புகார் மனுவில் தொடர்புடைய சர்வே எண். 139/1–ல், தன்னுடைய மனைவி, அம்சவேணி அவர்களின் உரிமை உண்டானதற்கான பெயர் இடம் பெறவில்லை என்ற காரணம் தெரிவித்து, மனுவினை தள்ளுபடி செய்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.5 மேற்படி தீர்ப்பின் படி புகார் மனுவில் தொடர்புடைய சர்வே எண்.139/1 ல் உரிமை உண்டானதற்கான பெயர் இடம் பெற்றவர்கள், புகார் மனு தாக்கல் செய்யலாம் எனவும், தற்பொழுது மேற்படி சர்வே எண்ணில், நிலம், கிணறு, மின் இணைப்பு ஆகியவைகளில் உரிமை உள்ள, மேல்முறையீட்டாளர் / மூத்த குடிமகன் ஆகிய தான் தாக்கல் செய்துள்ள மனுவினை, ஷை உத்தரவை குறிப்பிட்டு தள்ளுபடி செய்துள்ளது ஏற்படையது அல்ல எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.6 இந்திய அரசியல் சாசனம் 1950ன் கோட்பாடு 21–இன் படி சட்டப்படியான விசாரணை முறை அன்றி வேறு எந்தவிதமாகவும் செயல்பட்டு, மேல்முறையீட்டாளர் / மூத்த குடிமகன் ஆகிய தன்னுடைய உரிமையை மறித்து, தடுத்து, பறிக்க இயலாது எனவும், மேலும் அந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள வாதங்கள் / தீர்ப்புகளின்

அடிப்படையில், தலைவர், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம். உடுமலைப்பேட்டை மின் பகிர்மான வட்டம் / உடுமலை அவர்கள், சட்டப்படியான விசாரணை மேற்கொண்டால் எதிர்மனுதாரர் மீது உரிய சட்ட & துறை ரீதியான நடவடிக்கை எடுக்க நேரிடும் என குற்றம் கருதி, உள்நோக்கத்துடன் மனுவினை தள்ளுபடி செய்துள்ளார் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.7 இம்மாமன்றம், ஒரு மின் குறை தீர்க்கும் மன்றத்தில், சட்டப்படியான விசாரணை முறை என்றால் என்ன? தரப்பினர்களுக்கு அழைப்பாணை அனுப்ப வேண்டுமா / இல்லையா? அழைப்பாணை அனுப்ப வேண்டியது அவசியமா / இல்லையா? தரப்பினர்களின் வாதங்கள் கேட்கப்பட வேண்டுமா / இல்லையா ? என்பது பற்றி, குறை தீர் மனுவில் சொல்லப்பட்டுள்ள வாதங்களுக்குரிய தகுமுறை விளக்கங்கள், பாதிக்கப்பட்ட, மனுதாரருக்கு வழங்க வேண்டுமா / வழங்க வேண்டாமா? என்பது பற்றி இம் மேல்முறையீட்டு மனுவின் உத்தரவில் தெரியப்படுத்த வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.8 மேல்முறையீட்டாளர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ள சங்கதிகள் தவிர, மீதமுள்ள அனைத்தையும், மேற்படி எதிர்மனுதாரர்களே, நிரூபிக்க கடமைப்பட்டவர் எனவும், இம்மனுவிற்கு, தேவைப்படுமாயின் / தக்க தருணத்தில், கூடுதல் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்ய, தயாராக உள்ளதாக, மேல்முறையீட்டாளர் / மூத்த குடிமகன் ஆகிய அவர், பணிவுடன் தெரிவித்துக் கொண்டார்.

4.9 ஆகவே, இம்மேதகு சமூகம் அவர்கள், மேற்படி வாதங்களின் அடிப்படையில், "இந்திய அரசியல் சாசனம் 1950"ன் கோட்பாடு 21ன் படி, சட்டப்படியான விசாரணை செய்ய வேண்டி, இம் மேல்முறையீட்டு மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து ஏற்று, கடந்த 03.08.2022-ம் தேதியிட்டு மன்றத்தில் தாக்கல் செய்த புகார் மனுவின் மீது, மேல் விசாரணை செய்து தனக்கு போதிய வாய்ப்பு வழங்கி உரிய வாதங்களை கேட்டுப் பெற்று, அதன் அடிப்படையில் தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 5.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

5.1 தலைவர், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் உடுமலை அவர்களுக்கு மனுதாரர் திரு நடராஜ் அவர்களால் கடந்த 03.08.2022-ஆம் தேதியிட்டு அனுப்பப்பட்ட

இதே பொருள் மற்றும் கோரிக்கை கொண்ட மனு தொடர்பாக மனுதாரருடைய மனைவி திருமதி அம்சவேணி க/பெ.நடராஜ் அவர்களது 08.12.2021 தேதியிட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு 30/2021 மீது மனுதாரர் திருமதி. அம்சவேணி க/பெ.நடராஜ் அவர்களது முன்னிலையில் உடுமலைப்பேட்டை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் விவாதிக்கப்பட்டு தீர்ப்பு விபரம் திருமதி.அம்சவேணி அவர்களுக்கு 25.02.2022 அன்று வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.2 ஒரு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனுவின் மீது விவாதிக்கப்பட்டு தீர்ப்புரை வழங்கப்பட்டபின் அதே பொருள் கொண்ட மற்றொரு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனுவின் மீது விவாதிக்க இயலாது என்பதால், மனுதாரர் திரு.நடராஜ் அவர்களால் கடந்த 03.08.2022 ஆம் தேதியிட்டு அனுப்பப்பட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு விவாதத்திற்கு ஏற்க இயலாமல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.3 Chairman Memo No.SE/RE/DE/SS/A1/C 473-1/83 dated 05-12-1983 தெரிவிக்கப்பட்டுள்ளதற்கேற்ப அங்கலக்குறிச்சி கோட்டத்திற்குட்பட்ட உதவி மின் பொறியாளர்/ இபே/ மேற்கு/ தேவனூர்புதூர் பிரிவு அலுவலகத்தைச் சார்ந்த ஜல்லிபட்டி கிராமம் சர்வே எண் 139/1 இல் உள்ள கிணற்று மின் இணைப்பு எண் 146 இடமாற்றம் கோரிய தேதியில் திரு.நா.சண்முகவேல் பெயரில் இருந்ததாலும், இடமாற்றம் கோரிய ஜல்லிபட்டி கிராமம் சர்வே எண். 140/1-இல் உள்ள ஆழ்குழாய் கிணறு அவரது பெயரிலேயே இருந்ததாலும் விவசாய மின் இணைப்பு எண்.03-333-004-146 ஆனது 11.02.2008 அன்று திரு நா.சண்முகவேல் அவர்களது விண்ணப்பத்தின் பேரில் DCW விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டின்படி தொகை வசூல் செய்யப்பட்டு வாரிய விதிகளுக்குட்பட்டே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதால் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க எந்த முகாந்திரமும் இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் உடுமலை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பேரில் திருமதி, அம்சவேணி க/பெ நடராஜ் அவர்களால் அளிக்கப்பட்ட மேல் முறையீட்டு மனுவின் பேரில் கடித. எண்.தா.மி.கு/கோ.மனு எண்.199/ அ.எண். 2022, நாள்.17.03.2022 வழங்கப்பட்ட கடிதத்தின்படி மனுதாரர் திருமதி.அம்சவேணி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவானது மின் நுகர்வோர் மின் இணைப்பின் குறைபாடு பற்றியதும் அல்ல, மின் இணைப்பின் சேவை குறைபாடு பற்றியதும் இல்லை.

எனவே முறையீடு சம்பந்தமாக உரிய வேறு சட்ட வழிமுறைகளை நாடுமாறு மின் குறைதீர்ப்பாளர் அவர்களால் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.5 தற்போது திரு.நடராஜ் அவர்களால் அனுப்பப்பட்ட மனுவும் அதே கோரிக்கை கொண்டதாக இருப்பதால், உடுமலை மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் மனுவானது விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளாமல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் மின்குறைதீர்ப்பாளர் CGRF Regulation. Part III (Electricity Ombudsman) 17.(4).C–இல் தெரிவித்துள்ளதன்படி மேற்படி மனுதாரரின் கோரிக்கை ஏற்க இயலாது என்பதாலும், மின் குறைதீர்ப்பாளர் அவர்களால் ஏற்கனவே மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளதன்படியும் மனுதாரரது மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

6.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

6.2 இவ்வழக்கின் முக்கிய சாராம்சம் பாகபிரிவினைக்கு முன்பு உள்ள க .ச.எண்.139 மின் இணைப்பு பெற்ற கிணற்றுக்கும் பாகப்பிரிவினை நடந்த பின்பு ஏற்படும் பிரச்சனையின் அடிப்படையில் மின் இணைப்பு தற்சமயம் பயன்பாட்டில் உள்ள 140/1 ஆழ்குழாய் கிணற்றில் இருந்து மீண்டும் மாற்றி அமைப்பது சம்பந்தமாக மேல்முறையீட்டாளர் எழுப்பும் கோரிக்கைப் பற்றி தீர்வு மின் குறை தீர்ப்பாளர் முன்பு எழுப்பப்படும் வழக்காகும்.

6.3 இந்நிலையில் இவ்வழக்கின் விவசாய மின் இணைப்பு எண் 03–333–004–146, 7.5 HP 24.12.1973 அன்று க .ச.எண்.139/1 இல் இருந் த திறந்தவெளி கிணறு நாச்சிமுத்து கவுண்டர் உயிருடன் இருந்தபொழுது அவரது வாரிசுதாரர்களான 1) திரு. சண்முகவேல், 2) திரு. சின்னத்துரை 3) திரு.நடராஜ் (மைனர்), 4) திரு.சிவசாமி (மைனர்) ல் ஒருவரான திரு . சண்முகவேல் த /பெ நாச்சிமுத்துக் கவுண்டர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. அன்றைய சூழ்நிலையில் அவ்வாறு வழங்கபட்ட போது எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றும் தெரிய வருகின்றது . மேல்முறையீட்டாளர்

தற்சமயம் எழுப்பும் கோரிக்கை யில் எவ்வாறு திரு. சண்முகவேல் அவர்களுக்கு திரு. நாச்சிமுத்து கவுண்டர் ஒப்புதல் வழங்காமல் மின் இணைப்பு வழங் கப்பட்டது என்பதை பற்றி முறையிட்டார். 1973 ஆம் ஆண்டு மேல்முறையீட்டாளரோ அல்லது அவருடைய மற்ற வாரிசுதாரர்களோ அல்லது மேல்முறையீட்டாளரின் தந்தை திரு. நாச்சிமுத்து கவுண்டரோ திரு . சண்முகவேலுக்கு க .ச.எண் 139 ல் உள்ள திறந்த வெளி கிணற்றுக்கு ஏதாவது ஆட்சேபணை தெரிவித்தார்க ளா என்று வினவிய போது , மேல்முறையீட்டாளர் அதற்கான பதில் வழங்கவில்லை. மேலும் ஏதேனும் ஆட்சேபனை மனு எதிர்மனுதார ருக்கு அந்த காலகட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அதற்கான ஒப்புகை சான்றுகள் இருந்தால் சமர்ப்பிக்கவும் என்று வினவிய போது மேல்முறையீட்டாளர் அதற்கான ஆ தாரங்களை தெரியப்படுத்தவில்லை . மேலும் மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரரிடம் எழுப்பும் கேள்வி 1973 ஆம் வருடம் மின்னிணைப்பு வழங்கப்பட்ட காலமாகும் . இது சுமார் 49 வருடங்களுக்கு முன்பே நடந்த நிகழ்வாகும். ஆகவே, 1973 இல் திரு. சண்முகவேல் த /பெ திரு நாச்சிமுத்து கவுண்டர் பெயரில் மின்னிணைப்பு வழங்கியதில் ஆட்சேபணை இருந்ததாக தெரிய வரவில்லை.

6.4 மேலும் எதிர்மனுதாரர் 139/1 ல் உள்ள கிணற்று மின் இணைப்பு எண் 146 இடமாற்றம் கோரிய தேதியில் திரு . நா. சண்முகவேல் பெயரில் இருந் ததாலும் இடமாற்றம் கோரிய ஜல்லிபட்டி கிராமம் சர்வே எண் 140/1 ல் உள்ள ஆழ்குழாய் கிணறு திரு. நா. சண்முகவேல் பெயரில் இருந் ததாலும் மின் இணைப்பு எண் 03-333-004-146 ஆனது 11.2.2008 அன்று திரு . நா. சண்முகவேல் அவர்களது விண்ணப்பத்தின் பேரில் DCW விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை வசூல் செய்யப்பட்டு வாரிய விதிகளுக்கு உட்பட் டே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார். மேலும் மின்னிணைப்பு மாற்றம் செய் த 2008 கால கட்டத்தில் ஆட்சேபனை கோரிக்கை மேல்முறையீட்டாளர் முறையிடவில்லை என்றும், 2014-க்கு பிறகு தான் முறையிட்டதாக தெரிவித்தார்.

6.5 இந்நிலையில் திருமதி அம்சவேணி க /பெ. நடராஜ் அவர்களது கோரிக்கையான க.எண் 140/1-இல் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் திரு .சண்முகவேல் த /பெ திரு . நாச்சிமுத்து கவுண்டர் அவரது பெயரில் உள்ள மின்னிணைப்பு 139/1 இல் மாற்ற கோரிய மனுவானது திருமதி. அம்சவேணி, க/பெ. திரு.நடராஜ் அவர்களுக்கு உரிமை

இல்லாத 14 வருடங்களுக்கு முன்பு இடமாற்றம் செய் த மின்னிணைப்பு பற்றிய கோரிக்கையாக இருந்ததால் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் , உடுமலை மின் பகிர்மான வட்ட த்தின் 25.2.2022 நாளிட்ட தீர்ப்பின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

6.6 மேலும் தற்சமயம் திருமதி அம்சவேணி க /பெ. நடராஜ் அவர்கள து கோரிக்கையான க.எண் 140/1–இல் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் திரு .சண்முகவேல் த/பெ திரு. நாச்சிமுத்து கவுண்டர் அவரது பெயரில் உள்ள மின்னிணைப்பு சர்வே எண் 139/1 இல் உள்ள கிணற்றிற்கு மாற்ற கோரிய மனு சம்பந்தமான அதே கோரிக்கையில் நிவாரணம் கோரி மேல்முறையீட்டாளரான திரு. நடராஜன் அவர்கள் தற்பொழுது உடுமலை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையிட் டதாக தெரியவருகிறது.

6.7 மேலும் திரு. நடராஜ் த/பெ நாச்சிமுத்து கவுண்டர் அவர்களது மனைவி திருமதி அம்சவேணி மூலம் இக்கோரிக்கையை முறையிட்டு அதனை உடுமலை மின் பகிர்மான வட்டம்/ மின் நுகர்வோர் மன்றத்தால் நிராகரிக்கப்பட்ட பின்பு அதே கோரிக்கையை மின் குறைதீர்ப்பாளரிடம் சுமார் 49 வருடங்களுக்கு முன்பே சண்முகவேல் பெயரில் திறந்தவெளி கிணற்றில் க.எ.139/1 இல் மின் இணைப்பு வழங்கியது பற்றியும் மற்றும் க.எ.140/1 ல் உள்ள ஆழ்குழாய் கிணறு க்கு சுமார் 14 வருடங்களுக்கு முன்பு மின் இணைப்பை இடமாற்றம் செய்த நிகழ்வை புதியதாக முறையிட்டு இருப்பதால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் நுகர்வோரின் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகள் , 2004 விதி 17(4)(ஆ)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"17.(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*
> *Xxxx*
> *ஆ. முறையீடு முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்."*

6.8 இதன்படி இம்மேல்முறையீட்டில் மின்னிணைப்பு வழங்கிய 49 வருடங்களுக்கு பிறகும், மின்னிணைப்பு சர்வே மாற்றம் செய்த 14 வருடங்களுக்கு பிறகும் நிவாரணம் கோரப்பட்டுள்ளது. பத்தி 6.7 உள்ள தீர்வின்படி இம்முறையீட்டிற்கான நிகழ்வு நடந்து மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்படவில்லை என அறியப்படுகிறது.

6.9 எனவே, கீழ்க்கண்ட சாராம்சங்களின்படி மேல்முறையீட்டாளரின் மேல்முறையீடு கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

1) விவசாய மின் இணைப்பு எண் 03–333–004–146, 7.5 HP 24.12.1973 அன்று க.ச.எண்139/1 இல் இருந் த திறந்தவெளி கிண ற்றிற்கு நாச்சிமுத்து கவுண்டர் உயிருடன் இருந்தபொழு தே திரு. சண்முகவேல் த /பெ நாச்சிமுத்துக் கவுண்டர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. அன்றைய சூழ்நிலையில் அவ்வாறு வழங்கபட்ட போது எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

2) விவசாய மின் இணைப்பு எண் 03–333–004–146, க.ச.எண்.139/1 இல் இருந்த திறந்தவெளி கிண ற்றிற்கு 24.12.1973 அன்று வழங்கிய பின்புதான் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது.

3) 24.12.1973–ல் விவசாய மின் இணைப்பு எண் 03–333–004–146 வழங்கியபோது நுகர்வோர் மற்றும் உரிமதாரர் ஆகியோர் இடையே விதிமுறைகளின்படி நடைமுறைப் படுத்தப்பட்ட இசை வு (Agreement) பத்திரத்தின்படி திரு.சண்முகவேல் த/பெ திரு. நாச்சிமுத்து கவுண்டர் அவர்கள் மின்னிணைப்பின் உரிமைதாரர் ஆவார்.

4) மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங் குமுறை விதிகள், 2004 விதி 17(4)(ஆ)–ல் குறித்துரைக்கப்பட்ட கால அளவை கடந்து மின்னிணைப்பு வழங்கிய 49 வருடங்களுக்கு பிறகும், மின்னிணைப்பு சர்வே மாற்றம் செய்த 14 வருடங்களுக்கு பிறகும் நிவாரணம் கோருவது ஏற்புடையதாய் இல்லை.

**7.0 முடிவுரை:**

7.1 பத்தி 6–இல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

7.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த முறையீட்டு மனு எண் 73/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு N. நடராஜன், – By RPAD
த/பெ. நாச்சிமுத்துக் கவுண்டர்,
7/84, கம்பாலபட்டி (அஞ்சல்),
ஆனைமலை வட்டம்,
கோவை – 642 007 .

2. செயற்பொறியாளர்/ இ&ப/ அங்கலக்குறிச்சி,
உடுமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/22 KV SS வளாகம், வாள்மாறை மெயின் ரோடு,
அங்கலக்குறிச்சி – 642 007.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
உடுமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருப்பூர் ரோடு, உடுமலை – 642 126.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.